விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆனி 23 ஷவ்வால் 28 இதழ் 146

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 7-7-1986

## சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த திருமலை, வன்னி இணைப்பதிகாரிகளுக்கு ஜனாதிபதி விசேட அதிகாரம்!

[கொழும்பு, ஞாயிறு

திருமலை வன்னி மாவட்டங்களில் செயலிழந்துள்ள சிவில் நிர்வாகத்தை மீண்டும் சகஜ நிலைக்குக் கொண்டுவர இம் மாவட்டங்களின் ராணுவ இணைப்பதிகாரிகளுக்கு விசேட அதிகாரங்களை ஜனாதிபதி வழங்கியுள்ளனர்.

இப் பிரதேசங்களில் கடமையாற்றும் அரசாங்க ஊழியர்க்கு, இப் பிரதேசங்களில் கடமையாற்றும் படையினர்க்கு வழங்கப்படும் அதேயளவு விரைவுக் கொடுப்பனவுப் பணம் வழங்கப்படவேண்டுமெனவும் ஜனாதிபதி உத்தர விட்டுள்ளார்.

அத்துடன் இப்பிரதேசங்களில் கடமைக்குவராத அரச ஊழியரின் வெற்றிடத்தை நிரப்புவதற்காக அவ்வப் பிரதேசங்களைச் சேர்ந்த எவரையும் நியமிக்கும் அதிகாரம் இவ்விரு மாவட்டங்களினதும் இணைப்பதிகாரிகளுக்கு ஜனாதி

(5ம் பக்கம் பார்க்க)

### புதிய யோசனைகள் அமுலாக்கம் குறித்து

# சகல இணைப்பதிகாரிகளுக்கும் கூட்டுப்படைத்தளபதி விளக்கம்!

(கொழும்பு)

**இனப்பிரச்னை தீர்வுகுறித்த இலங்கை அரசின் புதியயோசனைகள் அமுலாக்கப்படும் பட்சத்தில் கையாளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இராணுவ இணைப்பதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. கூட்டுப்படைகளின் தளபதி லெப்டினட் ஜெனரல் சிறில் ரணதுங்க இந்த விளக்கங்களை வழங்கியுள்ளார்.**

கொழும்பு கூட்டுப்படை தலைமையகத்தில் இடம்பெற்ற மகாநாட்டிலேயே ஜெனரல் ரணதுங்க இந்த விளக்கங்களை வழங்கினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இனப்பிரச்னைக்குததீர்வுகாணும்வகையில்இலங்கைஅரசு மாகாணசபைகள் மூலமான அதிகாரப்பரவலாக்கல் குறித்த யோசனைகளைமுன் வைத்துள்ளது.

தமிழ் அரசியல் குழுக்களை இந்தயோசனைகளை ஏற்கச் செய்வதில் அரசு தீவிர அக்கறைகாட்டுகின்றது. கூடவே தமிழ்க்குழுக்கள் இறற்றை ஏற்கக்கூடுமெனவும் அரசாங்க வட்டாரங்களில்எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே இந்த யோசனைகள் ஏற்கப்பட்டு புதிய நிர்வாக அமைப்புகள் தோற்றுவிக்கப்படும் பட்சத்தில் அவற்றை இலகுவாக அமுலாக்கும் விதத்திலேயே இராணுவ ஒத்துழைப்பும் நடப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதன் காரணமாகவே கூட்டுப்படைகளின் தளபதி சிறில் ரணதுங்கா புதிய யோசனைகளின் அமுலாக்கல் தொடர்பில் பாதுகாப்புப் படைகளின் பங்களிப்பு பற்றி விசேட அறிவுறுத்தல்களை வெளியிட்

(5ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் இளைஞர்கள் கைது

மட்டக்களப்பு, திங்கள்

மட்டக்களப்பு நகரில் உள்ள வீடொன்றை திடீரென நேற்று சுற்றிவளைத்த அதிரடிப்படையினர் அவ்வீட்டிலிருந்த இரு இளைஞர்களைக்கைது செய்துள்ளனர்.

அதிரடிப் படையினருக்குக் கிடைத்த ரகசியத் தகவலின் பேரில் தயாரிக்கப் பட்டிருந்த பெயர்ப்பட்டியலைக்கொண்டே குறிப்பிட்ட வீட்டிலிருந்த இரு இளைஞர்களையும் கைது செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலங்களாக இவ்விதமாக, பெயர்ப்பட்டியல்களின் உதவியுடன் தேடுதல் வேட்டை நடைபெற்று இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

### கிழக்கில் மாங்கேணி

## இராணுவ முகாம்மீது நள்ளிரவு தாக்குதல்

(மட்டக்களப்பிலிருந்து நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாங்கேணி இராணுவ முகாம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு போராளிகளால் தாக்கப்பட்டதில் இராணுவத்தினர் தரப்பில் ஒருவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டார்; மற்றும் 4 இராணுவத்தினர் காயங்களுடன் பொலநறுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் போராளிகளின் தாக்குதலினால் இராணுவத்தினர் முகாமிட்டிருந்த கட்டி

(5ம் பக்கம் பார்க்க)

## நவ ச. ச. க. உறுப்பினர்கள் ஜனாதிபதி சந்திப்பு

[கொழும்பு]

நவசமசமாஜக் கட்சியின் அங்கத்தவர்கள் இன்று 7ம் திகதி திங்கட்கிழமை ஜனாதிபதி ஜே ஆர் ஜயவர்த்தனவைச் சந்தித்து இனப் பிரச்னைக்கு தீர்வுகான அரசுசமர்ப்பித்துள்ள ஆலோசனைகள் குறித்து தமது கருத்துக்களை தெரிவிக்கவுள்ளனர்.

மேற்படிகட்சியின் தலைவர் திரு வாசுதேவ நாணயக்கார இன்று இந்தியா செல்வதால் அவர் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள மாட்டார்.

முதலில் பம்பாய் செல்லும் திரு நாணயக்காரா அங்கு தொழிற் சங்கத் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்திய பின்னர் தமிழகத்தில் தமிழ்க் குழுக்களைச் சந்திப்பார்.

இதேவேளை ஸ்ரீலங்கா மக்கள்கட்சி செயலாளர் திரு. விஜய குமாரணதுங் காவும் இனறு திங்கட்கிழமை தமிழகம் செல்கிறார் இது அவரது இரண்டாவது தமிழக விஜயம் என்பது குறிப்பிடத்தக்கது. [ய-செ]

### யாழ். மாவட்டத்தில்

## மீண்டும் வாகன கடத்தல் சம்பவங்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். மாவட்டத்தில் வாகனக்கடத்தல் சம்பவங்கள் மீண்டும் நடைபெறுவதையிட்டு வாகனங்களின் பாவனையாளர் மத்தியில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகமாக மோட்டார் சைக்கிள்களே கடத்தப்படுவதை தினசரி விடுக்கப்படும் உருக்கமான வேண்டுகோள்கள் எடுத்துக் காட்டுகின்றன.

விடுதலை இயக்கங்களின் பெயரைச் சொல்லியும், சில இடங்களில் ஆயுதமுனையில் பயமுறுத்தியும் வாகனக்கடத்தல் இடப்பெறுவதாகக்

(5ம் பக்கம் பார்க்க)

## "இலங்கை இனப்பிரச்னை தீர்ந்தாலே அபிவிருத்தி!"

### யுனெஸ்கோ பணிப்பாளர்

கொழும்பு, ஞாயிறு

இலங்கையின் இனப்பிரசினை தீர்த்துவைக்கப் பட்டால் மட்டுமே அதன் வளர்ச்சி சகல துறைகளிலும் அபிவிருத்தி அடையும்"

யூனெஸ்கோ பிரதம பணிப்பாளர். திரு. மகதா எம்போ பாரிஸில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனாப். ஏ.ஸி. எஸ். ஹமீத்திடம் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாப்ஏ.ஸி.எஸ்.ஹமீத்தை பாரிசில் சந்தித்த திரு. எம்போ மேலும் தெரிவித்திருப்பதாவது;-

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பதில் அரசு போதியளவு முன்னேற்றம் கண்டுள்ளது. இலங்கை மக்கள் சகிப்புத் தன்மையும் கலாச்சாரப் பாரம்பரியங்களையும் கொண்டவர்கள், என்று கூறிய எம்போ பயங்கரவாத நடவடிக்கைகளால் இலங்கை

(5ம் பக்கம் பார்க்க)

### ஜூலை 15 மகாநாடு

## ஆலோசனை நடதத த. வி. கூ. புதுடில்லி பயணம்

சென்னை, திங்கள், 7

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக இம்மாதம் 15-ம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கும் அரசியல் கட்சித் தலைவர்களின் மகாநாட்டில் கலந்து கொள்வது குறித்து இந்திய மத்தியஅரசுடன் கலந்தாலோசித்து முடிவுசெய்ய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் நேற்று புதுடில்லி பயணமானார்கள்.

தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்கள் புதுடில்லியில், பிரதம மந்திரி திரு ராஜீவ் காந்தி, வெளியுறவு அமைச்சர் திரு. சிவ்சங்கர், மற்றும்வெளியுறவு அமைச்சக உயர் அதிகாரிகளையும் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடாத்துவார்கள்.

இந்தியத் தலைவர்களுடனான சந்திப்பைத் தொடர்ந்து இலங்கை மகாநாட்டில் கலந்து கொள்வது பற்றி முடிவெடுக்க புதுடில்லி சென்றுள்ள த. வி. கூ.வின் 'பொலிட் பீரோ' அதிகாரம் அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [வா]

## திருமலையில் இருவர்பலி!

கொழும்பு, ஞாயிறு

திருமலையில் மாட்டுவண்டில் ஒன்றில் சென்று கொண்டிருந்த சிங்களக் குடும்பம் ஒன்றை தமிழ்த் தீவிரவாதிகள் தாக்கியதில் வண்டிலிலிருந்த பெண்ணொருவரும் ஒரு சிறு பிள்ளையும் கொல்லப்பட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

## மட்டக்களப்பில் அதிரடிப்படை குவிப்பு

மட்டக்களப்பு திங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு ஒருவாரமாக தினசரி நூற்றுக்கணக்கான அதிரடிப் படையினர் முகாம்களில் மேலதிகமாகக் குவிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றும் கொழும்பிலிருந்து மட்டக்களப்பு வந்து சேர்ந்த ரயிலில் 100 அதிரடிப்படையினர்பெட்டி படுக்கைகளுடன் இறக்கப்பட்டனர். இவர்கள் களுவாஞ்சிக்குடி, அக்கரைப்பற்று முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (மா)

## வரி விளம்பரம்

### வகுப்புகள்

Quantity Surveying[காலம்: 3 மாதம்] வகுப்பு ஆரம்பம்: 7-7-86 1-30 p.m. விபரங்கட்கு: JAFFNA TECHNICAL INSTITUTE, 52/1, Stanley Road, Jaffna (C3239)

### விற்பனைக்கு

கோண்டாவிலில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க: S. கனகலிங்கம், நெட்டிலிப்பாய். கோண்டாவில். (C3235)

வீட்டுத்தளபாடங்கள், அல்மாரி, Nursery தளபாடங்கள், Akai Stereo றேடியோ, Baby cot, Formica சாப்பாட்டு மேசை. Verandah Chairs Book Shelf, எழுதுமேசை, சியெஸ்டா மெத்தைகள், Water Filter, கிளாஸ்வகைகள் மற்றும் பல உடன்விற்பனைக்குண்டு. 326. பிரதான வீதி யாழ்ப்பாணம். [மாவடிச் சந்தி] [C3262]

நல்ல நிலையிலுள்ள Sony 2020கலர் ரி-வி Goldstar 17'' B/W ரி-வி விற்பனைக்குண்டு தொடர்பு:- S. கிருபாகரன் வசந்தவாசா, பத்தாவத்தை, இளவாலை. [C-3325]

நல்ல பாவிப்பில் உள்ள உஷா குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும். செ. ஸ்ரீகரன் செந்தாமரை, 22/4, விதானையார்வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (C-3282

காரைநகர் மல்லிகை புதுறோட்டுக்கு அருகாமையில் இருக்கும் நன்னீர் வசதியுள்ள 20 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பகுதிகளாகவும் பிரித்துக் கொடுக்கப்படும் தொடர்புகொள்ள த. கெங்காதரன் 124, 3ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். [C-3316]

நீங்கள் விரும்பும் பத்து சினிமா பாடல் புத்தகங்களை 7/50 முத்திரை அனுப்பி தபாலில் பெறுங்கள். டேவிட் லிகோரி, 38, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (C 3312)

பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அம்பலவாணர் சிவராசா அவர்களால் எழுதப்பட்ட இலங்கையின் அரசியல் திட்டங்கள் (1833 தொடக்கம் 1978 வரை) 1980ம் ஆண்டு வெளிவந்தவுடன் விற்பனையாகிவிட்டன. பல்கலைக்கழக மாணவர்களின் வேண்டுதலுக்கமைய மறுபதிப்பு வெளிவந்து விற்பனையாகின்றது. விலை ரூ. 27/50 பதிப்பாளர்: சிவா பிறின்டேர்ஸ், மெயின் வீதி, கைதடி. (C 3298)

### வாடகைக்கு

கொக்குவில் குளப்பிட்டிச் சந்திக்கருகாமையில் காங்கேசன்துறை வீதியில் ஒருகடையும் வீடும் வாடகைக்குண்டு. உடன் தொடர்புகொள்ளவும் [விலையாகவும் பெற்றுக்கொள்ளலாம்] கு. வல்லிபுரம், இராமலிங்கம் வீதி. முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். [C 3257]

சகல வசதியும் அமைந்த வீடு உடன் வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: நா. முருகேசு, 'இலக்குமி வாசா', கூளாவடி லேன், ஆனைக்கோட்டை. (C 3326)

### தேவை

நல்ல நிலையிலுள்ள Honda-C70, C90; Scooter- வெஸ்பா, பாஜஜ் தொடர்பு: J. P. T. Ltd, 3, நவீனசந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம். (A 911)

### மணப்பந்தல்

இந்து உயர்குல West Germanyயில் தொழில் புரியும் மணமனுக்கு 30 வயதுக்குட்பட்ட பெண் தேவை. Germanyயிலே தற்பொழுது இருப்பவர்கள் விரும்பத்தக்கது. குறிப்புடனும் ஏனைய விபரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். விளம்பர இலக்கம்: 3330, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 3330)

### தவறிவிட்டது

எனது கார் லைசன்ஸ் புத்தகம் அளவெட்டி சீனன்கலட்டி பாடசாலைக்கு அருகாமையில் உள்ள திருமதி நவரத்தினம் என்பார் வீட்டின் முன்னால் தவறிவிட்டது இதனைக்கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து தில்லைநாதன், மிசன் பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் என்னும் விலாசத்திலோ அல்லது திருமதி நவரத்தினத்திடமோ ஒப்படைக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C3306)

### 31-ம் நாள் நினைவஞ்சலி



திரு. மா. ஐயாத்துரை (M. I.)

மலர்வு: 18-04-1927

உதிர்வு: 07-06-1986

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய், பிள்ளைகளுக்கு நல்ல வாழ்வினை அளிக்க அனுதினமும் ஆண்டவனைப் பக்தியுடன் வேண்டி நின்று எம்மையெல்லாம் ஆளாக்கிப் பேராக்கிய எமது அன்புத் தெய்வமே! எமைவிட்டுப் பிரிந்து நீங்கள் எங்கு சென்றாலும் எங்கள் உயிரிலும் உடலிலும் கலந்துவிட்ட நீங்கள் என்றும் எங்களுடனேயே வாழுகிறீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பருளாய் முருகன்,
கல்லைவேம்படி,
சுழிபுரம். (C 3320)

### 31-ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
ஆ. செந்தில்நாயகம் அவர்கள்
(அரச மருந்து கலவையாளர்)

அன்னை மடியில்: 8-12-1926

அரன் அடியில்: 7-06-1986

பாசத்தின் உறைவிடமே
பண்பின் குலவிளக்கே
நெஞ்சு பொறுக்குதில்லை
உம் பிரிவை நினைக்கையிலே.

சாந்தி பெறுவீராக!

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரர்,
உற்றார், உறவினர்.

83/2, ஸ்ரான்லி வீதி,
யாழ். நகர். (C 3334)

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற தும்பளை மயில்வாகனம் கிட்டிணபிள்ளை என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்.

கிட்டிணபிள்ளை சைபெண் சிவக்கொழுந்து தும்பளை, பருத்தித்துறை.

மனுதார்.

மரணசாதன நியாயதிக்கம் இல. 1234/த

எதிர்

1. கிட்டிணபிள்ளை சந்திரன்
2. கிட்டிணபிள்ளை சற்குணம்
3. கிட்டிணபிள்ளை நாகருசன்

எல்லாரும் தும்பளை, பருத்தித்துறை.

—எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக/மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறன்து

அக்கறையுள்ள ஆள்எவரும் 1986ம் ஆண்டு ஆவணி மாதம் 29ந் நாளன்று முற்பகல் 9 30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ச. நடராசா
(ஒப்பம்)
பதிவாளர்.

ஆக்கம்
இராமசுவாமி சதானந்தன்
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்.
புலோலிதெற்கு, புலோலி.

1986ம் ஆண்டு ஆனி மாதம் 24ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. [A910]

## உருக்கமான வேண்டுகோள்

17-04-86 அன்று எனது வீட்டிற்குவந்து எனது ELF 30 ஸ்ரீ 5790 இலக்க வானை எடுத்துச்சென்றவர்களிடம் கேட்டும் இதுவரை திருப்பித்தரவில்லை. புனித இயக்கங்கள் தலையிட்டாவது எனது குடும்பத்தின் வறுமையை நேராகப் பார்த்து இந்த வானை பெற்றுத்தந்து எனது குடும்பத்திலுள்ளோரை காப்பாற்றுமாறு தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

ம. தெய்வேந்திரம்,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(A-912)

## பிரயாண ஒழுங்குகள்

1986 வைகாசி 24ல் இங்கிருந்து அழைத்துச் சென்ற சகலரையும் கொழும்பிலிருந்து நேரடியாக டென்மார்க் அனுப்பிவிட்டு எங்கள் முகவர் யாழ்நகர் வந்துள்ளார்.

கூடியவிரைவில் குறைந்த செலவில் எங்கள் முகவர்

டென்மார்க் செல்பவர்களை மீண்டும் அழைத்துச் செல்வார்.

உடன் தொடர்புகொள்ளவும்.

**GROUP ATLANTIC**

163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[அடைக்கலமாதா கோவில் முன்பாக]

(A-772)

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், பொன்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

டென்மார்க்

கொழும்பிலிருந்து நேரடிப் பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால் எம்முடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

**INTERSUN GROUP,**

சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய்.

[A 729]

## பிரயாண ஒழுங்கு

★ டென்மார்க் ★ கனடா

ஆகிய நாடுகளுக்கு செல்வதற்கான ஏற்பாடுகளை செய்துகொள்வதற்கும்

வெளிநாட்டுப் பயணங்களிற்கான பாஸ்போட், விசா, விமானச் சீட்டுக்கள் போன்றனவற்றை குறைந்த செலவிலும் வெகுவிரைவிலும் செய்துகொள்வதற்கு நீங்கள் தொடர்புகொள்ளவேண்டிய இடம்:

**லிப்ருஸ் லிமிற்றெட்**

R. G. கட்டடம்,
இல.70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

No: 94 1/7, York Street,
York Building,
Colombo - 1

மற்றும்

இத்தாலி, பிரான்ஸ்,
மேற்கு ஜேர்மனி, சுவிஸ்.

ஆகிய நாடுகளுக்கு எங்களது முகவர் 18ம் திகதி உங்களைக்கூட்டிசெல்ல உள்ளார்.

பாஸ்போட், முற்பணம் தந்தவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

[A-769]

உலகச் செய்திகள்

# "தென்னுபிரிக்காவுக்கு எதிரான தடையால் பாதிப்படையும் நாடுகளுக்கு உதவ திட்டம் தயாரிக்கப்படும்"

## ராஜீவ் அறிவிப்பு

போர்த்லூாயி. ஜூலை-6

"இன ஒதுக்கலை முற்ருக அகற்றும் நோக்கமே பிறிட்டோரியா அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்படவுள்ள பொருளாதாரத் தடை நடவடிக்கையாகும்" என்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கூறியுள்ளார்.

மொரிஷியஸ் தீவுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு ராஜீவ் காந்தி அங்கு நிருபர்கள் மத்தியில் பேசும் பொழுதே இதனைத் தெரிவித்தார்.

இப்பொருளாதாரத் தடை காமன்வெலத் நாடுகளைப் பாதிப்படையச் செய்வதற்காகவல்ல என்று கூறிய திரு. ராஜீவ் காந்தி, தென்னுபிரிக்கா மீது தடைகளை விதிக்குமாறு உறுப்பு நாடுகளைக் காமன்வெல்த் கேட்டுக்கொள்ளும் பொழுது அத்தடைகளால் மோசமாகப் பாதிக்ப்படும் நாடுகளுக்கு உதவும் வகையில் திட்டமொன்று தயாரிக்கப்படுவது அவசியமென்றும் கூறினுர்.

அடுத்த மாதத்தில் லண்டனில் கூடவுள்ள காமன்வெல்த் சிறிய உச்சிமாநாட்டில் இது குறித்து விரிவாக ஆராயப்படுமென்றும் கூறிய பிரதமர், காமன்வெல்த் நாடுகளின் நலனைப் பாதிக்காதபடி இன வெறியை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும்வகையில் தென்னுபிரிக்காவைப் பணிப்பதே இத்தடையின் நோக்கமென்றும் அவர் கூறினுர்.

இலங்கை இனப்பிரச்சினை குறித்து நிருபர்களின் கேள்விக்குப் பதிலளித்த பிரதமர், "தமிழ் போராளிகளுக்கு இந்தியா உதவியளித்து வருகின்றது" என்ற கூற்றுக்கு மறுப்புத் தெரிவித்ததுடன், இலங்கை அரசின் சமீபத்திய புதிய யோசனைகள் பரிசீலனைக்காகப் போராளிகள் குழுக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் பின் இதுசம்பந்தப்பட்ட முடிவு தம்மால் எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

[ரா]

## அதிபர் ஷியா பதவி விலகக்கோரி பாகிஸ்தானில் ஆர்ப்பாட்டம்!

கராச்சி, ஜூலை-6

பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஷியா-வுல்-ஹக்கிற்கு எதிராகப் பெரியளவிலான ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன் தினம் இடம்பெற்றது.

கராச்சிக்குக் கிழக்கே 160வது கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள சாண்டோ முகமத்கான் என்னும் இடத்திலேயே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

எதிர்க் கட்சிகளினுல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டதுடன் அதிபர் ஷியா-வுல்-ஹக் உடனடியாகப் பதவியைவிட்டு விலகவேண்டும் என்றும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தைத் தடுத்து நிறுத்தப் பொலிசார் முற்பட்டபொழுது ஒருவர் பலியானதுடன், மூன்று பொலிசார் உட்பட ஒன்பதுபேர் படுகாயமடைந்துள்ளதாகவும் கூறப்பட்டது.

[ரா]

### 15 கோடி உதவி

போபால், ஜூலை- 6

போபால் நச்சு வாயு விபத்தினுல் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் பதினைந்து கோடி ரூபாவை இந்திய மத்திய அரசு மத்திய பிரதேச அரசிற்கு கடனுக வழங்கவுள்ளது.

(ரா)

## "தென்னுபிரிக்கா மீதான பொருளாதாரத் தடை இல்லையெனில் கொந்தளிப்பு ஏற்படும்"

### கவுண்டா மீண்டும் எச்சரிக்கை

லண்டன், ஜூலை-6

"தென்னுபிரிக்கா மீதான பொருளாதாரத் தடை விதிப்பது குறித்து பொதுநல அமைப்பு முடிவு எடுக்காவிட்டால் இப்பிரதேசத்தில் கொந்தளிப்பேற்படுவதைத் தடுத்து நிறுத்த முடியாது" என்று சாம்பியா அதிபர் திரு. கென்னத் கவுண்டா எச்சரிக்கையொன்றினை விடுத்துள்ளார்.

அடுத்த மாதம் லண்டனில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் சிறிய உச்சி மாநாட்டில் இதுபற்றிய முடிவினைக் காலதாமதமின்றி மேற்கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்தித்துள்ள திரு கவுண்டா, இது சாத்தியப்படாது போகும்பட்சத்தில் தாம் பொதுநலவாய அமைப்பிலிருந்து விலகிக்கொள்ளப்போவதாகவும் அறிவித்துள்ளார்.

இதேவேளை அதிபர் கவுண்டா இதுகுறித்து ஆகஸ்ட் 3ம் திகதியிலிருந்து 5ம் திகதி வரை பொதுநலவாய அமைப்பு நாடுகளின் ஐந்து தலைவர்களுடன் பேச்சுவார்த்தை ஒன்றினை நடத்தவுள்ளதாகவும் கூறப்பட்டது.

[ரா]

## "கிழக்கில் வன்செயலால்— இனவிகிதாசார சமநிலையை இழந்துபோகும் அபாயம்"

### மட்டு. எம். பி. சின்னலெப்பை எச்சரிக்கை

(மட்டக்களப்பிலிருந்து நமது நிருபர்)

திருமலை மாவட்டத்தில் சமீப காலத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களினுல் தமிழர்களின் பெரும்பான்மை குறைந்திருப்பதாகவும், அம்பாறை மாவட்டத்தில் பெரும்பான்மையாக இருந்த முஸ்லிம்கள் சிறுபான்மையாகச் சுருங்கக்கூடிய நிலை உருவாகியுள்ளதாகவும் மட்டக்களப்பு 2 வது எம் பி ஜனுப் பிஸ்வி சின்னலெவ்வை கருத்தரங்கொன்றில் தலைமை வகித்துக் பேசுகையில் கவலை தெரிவித்தார்.

உத்தேச மாகாண சபைகள் பற்றிய இக் கருத்தரங்கு காத்தான்குடி 6 ம் குறிச்சியிலுள்ள பாலிகா வித்தியாலயத்தில் நேற்றுக் காலைநடைபெற்றது அரசின் பணிப்பின் பேரில் இக் கருத்தரங்கு கூட்டப்பட்டது.

### இரு தமிழ்ப் பிரமுகர்கள்

இக் கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 18 தமிழ்ப் பிரமுகர்களுக்குத் தந்தி மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மட்டக்களப்புப் பிரஜைகள் குழு உப தலைவர் வண. பிதா சந்திரா பெர்ணுண்டோவும், மடடக்களப்பு மாவட்ட சபையின் தமிழர் விடுதலைக் கூட்டணி முன்னுள் உறுப்பினர் திரு. அல்பேட் ஜீவரத்தினமும் மட்டுமே இதில் கலந்து கொண்டனர்.

முஸ்லிம் சமூகத்தரப்பில் 40 பேர் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாணக் கருத்தரங்குத் தொடரின் முதலாவது கருத்தரங்கு இதுவாகும்.

ஜனுப் சினனலெப்பை தொடர்ந்து பேசுகையில்குறிப்பிட்டதாவது:

"1060 சதுரமைல்பரப்பைக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் 250 சதுரமைல் பரப்பு நிலம் முஸ்லிம்களுடையதாயிருந்தது ஆனுல் இன்று 70 சதுரமைல் பரப்பில் தான் முஸ்லிம்கள் வதிகின்றனர். உத்தேச மாகாணசபை ஆட்சியில் கிழக்கிலங்கையில் முஸ்லிம்களுக்கு விகிதாசாரப்படி காணி கிடைக்க வழி செய்யவேண்டும்.

### அம்பாறையில்

"அம்பாறை மாவட்டத்தில் 1981 ல் கடைசியாக நடத்தப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி இதுவரைபெரும்பான்மையாக இருந்த முஸ்லிம்கள் சிறுபான்மையினராகச் சுருங்கக்கூடிய நிலை உருவாகியுள்ளது. அதே வேளை அம்பாறை மாவட்டத்தில் சிங்கள மக்கள் பெரும்பான்மையினராகிக் கொண்டிருக்கிருர்கள்.

"திருமலை மாவட்டத்தில் 81ம் ஆண்டு சனத் தொகை மதிப்பீட்டின்படி தமிழர்கள் 33 8 விகிதமாயிருந்தது. சிங்களவர்கள் 33 விகிதமும் முஸ்லிம்கள் 29 விகிதமுமாகும்.

"சமீப காலத்தில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களுக்குப் பின்னர் தமிழ்ச் சகோதரர்களின் பெரும்பான்மை குறைந்திருப்பதைக் சுாணக் கூடியதாய் இருக்கிறது.

### கிழக்கில் இனவிகிதாசாரம்

'கிழக்கு மாகாணத்தில்தமிழர்கள் 42 விகிதம்; முஸ்லிம்கள் 32 விகிதம்; சிங்களவர் 24 விகிதம் ஏனையோர் 2 விகிதம்

"முஸ்லிம்களின் 32 விகிதத்தையும் சிங்களவர்களின் 24 விகிதத்தையும் சேர்த்துப் பார்த்தால் கிழக்கு மாகாணத்தில் இனங்களின் விகிதாசாரம் கிட்டத்தட்டச் சமமாக இருக்கும்.

### வடக்கில் தமிழர்

வடமாகாணத்தில் 92 விகிதம் தமிழர்களுக்கும் 4 74 விகிதம் முஸ்லிம்களும் இருக்கிருர்கள். இதனுல் அங்கு எந்தப் பிரச்சினையோ சர்ச்சையோ இருக்கமாட்டாது."

### வண.பிதா கருத்து

வண பிதா சந்திரா பெர்ணுன்டோ கருத்துத் தெரிவிக்கையில் "அரசாங்கம் மாகாணசபை யோசனையைப் பற்றி பூரணமான விளக்கம் அளிக்கவேண்டும். மாகாணசபை

(6ம் பக்கம் பார்க்க)

### ஜப்பானில் தேர்தல்

டோக்கியோ ஜூன்,- 6

ஜப்பான் பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று நடைபெற்றது.

512 அங்கத்தவர்களை தெரிவு செய்வதற்கான இத் தேர்தலில் சுமார் எட்டரைக் கோடி வாக்காளர்கள் வாக்களித்தார்கள்.

கீழ்ச் சபைக்கான இத் தேர்தல் 1988 ம் ஆண்டு நடைபெறவிருந்த போதும் மேல் சபைத்தேர்தலுடன் இணைந்து நடத்தும் வகையில் முன் கூட்டியே நடத்துவதாக பிரதமர் திரு நாகசோனி கூறியுள்ளார்.

(ரா)

## பர்னுலா அரசு மக்களின் நம்பிக்கையை இழந்து விட்டதாம்

புதுடில்லி, ஜூலை-6

பர்னுலா அரசு பஞ்சாப்பின் பெரும்பான்மை, சிறுபான்மை மக்களினது நம்பிக்கையை முற்ருக முழுதாக இழந்துவிட்டது என்று இந்திய ஜனதாக் கட்சியின் தலைவர் திரு சந்திரசேகர் குற்றச்சாட்டியுள்ளார்.

ஜனதாக் கட்சியின் இரண்டு நாட கூட்டத்தொடர் நேற்று முன்தினம் புதுடில்லியில் நடைபெற்றது. அப்பொழுதே திரு சந்திரசேகர் பர்னுலா அரசின் மீதான தமது இந்தக் குற்றச்சாட்டினைத் தெரிவித்தார்.

இதேவேளை "பஞ்சாப் மாநிலப் பிரதேசத்தில் இராணுவத்தை நிறுத்தவேண்டும்" என்று ஜனதாக் கட்சியினர் புதுடில்லியில் ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[ரா]

## "தெ. ஆபிரிக்க இனஒடுக்கல் ஆட்சி விரைவில் முடிவுக்கு வரும்!"

### மொரீஷியஸில் 'ராஜீவ்' நம்பிக்கை

போர்ட்லூாயி, ஜூலை, 6

"தென்னுபிரிக்காவில் இனஒடுககல் ஆட்சி விரைவில் முடிவுக்கு வந்துவிடும்" என்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி தெரிவித்துள்ளார்.

மொரீஷியஸ் தீவுக்கு விஜயமொன்றை மேற்கொண்டுளள இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி மொரீஷியஸ் பிரதமர் திரு. அன்ருத் ஜெகநாத் அளித்த வரவேறபு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

"தென்னுபிரிக்க ஆட்சி இரத்தக்களரியுடன் முடியுமா? அல்லது பெரும்பான்மைப் பிரிவுக்கு அமைதியாக ஆட்சியை மாற்றிக்கொடுத்து லட்சக்கணக்கான அப்பாவி மக்களின் உயிர்களை காப்பாற்ற முடியுமா என்பதுதான் இங்குள்ள பிரச்னையாகும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

"இன ஒடுக்கல் கொள்கையை கைவிடுமாறு பிரிட்டோரியா நிர்ப்பந்திக்கப்படுமா அல்லது அதற்கு ஆதரவு அளிக்கப்படுமா என்பதில் தான் இதன் பதில் அடங்கியுள்ளது" என்றும் தெரிவித்த திரு ராஜீவ்காந்தி ஆபிரிக்க முன்னரங்க நாடுகளுக்கு தாம் சென்று திரும்பியதைப்பற்றியும் குறிப்பிட்டார்.

இந்நாடுகளில் உள்ளோர் தென்னுபிரிக்காவில் ஒடுக்கப்பட்டுவரும் தங்களது சகோதரர்களுக்கு காட்டும் ஆதரவையும ஒற்றுமையையும் தாம் அங்கு நேரில் கண்டதாகக் கூறினுர்.

இந்துமா கடலை ஒரு அமைதிப் பிராந்தியம் என்று அறிவித்த 1971ம் ஆண்டு ஐ. நா. பிரகடனத்தை உடனே அமுலாக்கவேண்டும் என்றும் பிரதமர் ராஜீவ் தெரிவித்தார்.

### மணிவாக்கு

மூடநம்பிக்கைகளைப் பொறுத்தவரை அறிவாளிகளும் மூடர்களைத்தான பின் தொடர்கிறார்கள்.

—பிரான்ஸிஸ் பேக்கன்.

## நமதுநோக்கு

# கடலில் நடக்கும் படுகொலைகள்

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கடல் பிராந்தியம் அபிவிருத்தி செய்யப்படுமானால் இருநாடுகளுக்குமே பொருளாதார ரீதியில் பெரும் பயனளிக்கக்கூடியதாய் இருக்கும் என அறிஞர்கள் கருதுகிறார்கள்.

ஆனால் சமீப காலமாக இக்கடல் பகுதி மனிதர்களைக் கொன்றொழிக்கும் கொலைக்களமாக மாறிவிட்டமை பெரும் கவலைக்குரிய விடயம். கடல் பிரதேசக் கண்காணிப்பு வலயம் பிரகடனப்படுத்தப்பட்டதையடுத்து இப்பகுதியில் சராசரி தினமும் யாராவது ஒருவர் சுட்டுக்கொல்லப்படுகிறார், வள்ளங்கள் நாசமாக்கப்படுகின்றன மீனவர்கள் கொள்ளையடிக்கப் படுகிறார்கள். தினமும் சடலங்கள் தீவுக் கரைகளில் ஒதுங்கி வருகின்றன.

மிக அண்மையில் மீன் பிடிக்கச் சென்ற 30க்கும் மேற்பட்ட குருநகர் மீனவர்கள் மண்டைதீவுக்கப்பால் துடிக்கத்துடிக்கச் சுட்டும் குத்திக்குதறியும் கொலை செய்யப்பட்ட சம்பவம் இன்னமும் பச்சையாக நினைவில் இருக்கின்றது.

ராணுவக் கொடுமைகளுக்கஞ்சி அகதிகளாகப் புறப்பட்டுச் சென்றவர்கள், ஆழ்கடலில் மீன்பிடிக்கச்சென்றவர்கள், மற்றும் இந்தியப் பெருநிலத்திலிருந்து புறப்பட்டுவந்த போராளி குழுக்கள் என்று பலதரப்பட்டவர்களும் இப்பகுதியில் நிலை கொண்டுள்ள இலங்கைக் கடற்படையின் பீரங்கிகளுக்கிரையாகி வருகின்றனர்.

ஆயுதங்களுடன் வரும் போராளிகளைத்தான் பீரங்கிகொண்டு தாக்குகின்றார்கள் என்றால் ஆயுதம் ஏந்தாத மீனவர்களையும், அகதிகளையும்கூட இவர்கள் ஈவு இரக்கமின்றிக் கொன்றுவிடுவதாகக் குற்றஞ் சாட்டப் படுகின்றது

ஆயுதமில்லாத அப்பாவிகள்மீது சந்தேகம் ஏற்படுமானால் அவர்களைப் பிடித்து அடைத்து விசாரணை நடத்துவதுதான் முறை ஆனால் அவர்களிடம் இருக்கும் பெறுமதியானவற்றைப் பறித்துக்கொண்டு சுட்டுக் கொன்று கடலில் வீசுவது காட்டுமிராண்டித்தனம். நடுக்கடலில் நடப்பவை வெளியுலகிற்குத் தெரியாமற்போய்விடுமென்ற எண்ணத்தில் இது செய்யப்பட்டாலும் எவ்வாறோ உண்மைகள் வெளிவந்துவிடுகின்றன.

மத நம்பிக்கையுள்ள எந்த ஒரு மனிதனும் இவ்வாறான காரியங்களைச் செய்யத் துணியமாட்டான் இரகசியமாகச் செய்யப்படும் எந்தக் காரியத்தையும் நீதிதெய்வம் பார்த்துக்கொண்டு தன் இருக்கின்றது. என்றோ ஒருநாள் அதற்குத் தண்டனை வழங்கப்பட்டே தீரும் என அவன் நம்புவான்.

ஆனால் தெய்வ நம்பிக்கையே அற்றுப்போய்விட்ட இந்தக் காலத்தில் ஆயுத பலம் படைத்தவர்களே நீதிமான்களாகக் கருதப்படுகிறார்கள் அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் துப்பாக்கி நீதிதான்.

அண்மையில் தமிழ்நாட்டிலிருந்து இப்பகுதியில் கடலில் மீன்பிடிக்கப் புறப்பட்ட மீனவர்கள் காணமற்போனதையடுத்து அவர்களைத் தேடிவந்த மீனவர்கள் ஒன்பதுபேர் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. அவர்கள் பயணம்செய்த படகில் இருந்த மீனவர்களில் ஒருவர்மட்டும் உயிர்தப்பிவந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவருகின்றார். இம்மீனவர் கூறியுள்ள விபரம் நெஞ்சை உருக்குவதாயிருக்கின்றது.

அந்நிய தேசத்தவரான இவர்களுக்கே இந்தக் கதியென்றால் இந்நாட்டவர்களுக்கு ஏற்படும் கஷ்டங்களைப்பற்றி எவரும் ஊகித்துக்கொள்ளலாம்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கென ஏதேதோ முயற்சிகள் நடைபெற்றுவரும் இந்நேரத்தில் இலங்கைக் கடற்படையினர் தமது மூர்க்கத்தனத்தை ஓரளவுக்காகுதல் தளர்த்தியாக வேண்டும்.

இந்திய மீனவர்கள் அடிக்கடி இவ்வாறு தாக்கப்படுவதானது இப்பகுதியில் கடுமையான எதிர்விளைவுகளுக்கு இடமளிக்குமென்பதை உணரவேண்டும்.

## வீதிவலம் வருவாய்

ஈழத்தின் ஆறுபடை வீடுகளில் ஒன்றும்
இணுவையிலே அமர்ந்தருளும் இனிய தமிழ் அழகா
வேழத்தான் இளையவனே வினைதீர்க்கும் மருந்தே
திருத்தீர்த்த விழாவருள வீதிவலம் வருவாய்
ஆழத்தில் அடியவர்கள் மனங்களிலே நின்று
ஆறுதலை வழங்கிவரும் ஆறுதலை ஐயா
வாழத்தான் தமிழ் தமிழர் கலைகளித்த மண்ணில்
வள்ளிதெய்வ யானையுடன் வந்தருள்வாய் வாழி

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

★ இணுவில் கந்தசுவாமிகோவில் தீர்த்தோற்சவம் இன்று.

## நீதிகேட்டு வீதிவழிவந்த

# சிலுவைப் பேரணி!

மக்களுக்கு ஒரு சேதி சொல்ல மணியோசை ஒலித்தது ''தேவாலயத்தில்ஒலித்த இந்த மணியோசை யாருக்காக ஒலித்தது என்று நினையாதே; அது உனக்காகவும் சேர்ந்தே ஒலிக்கின்றது'' என யோன் டொன் என்ற கவிஞன் எழுதியுள்ளான்.

அன்று வண. திரு. இம்மனுவேல் வின்சஸ்லோஸ் அடிகளார் இராணுவத்தின் படுகொலைக்கு ஆளாகித் தான் வாழ்ந்த தோலகட்டி மண்ணிலே விண்ணுலகு எய்தினார்.

உங்கள் வீட்டில் இழவு நடந்தால் செய்தி; என் வீட்டில் நடந்தால் சாவீடுஎன ஒதுங்கியிருந்தோரின் கண்களை அவருக்காக நடந்த சிலுவைப் பேரணி திறந்துவிட்டிருக்கிறது.

ஆலயத்திலே வேலைசெய்த எம்பிரான் தொண்டர் போன்றவர். வேலைத் தளத்திலே இயேசு இவரைக்கண்டு தம்மைத்தொடருமாறு அழைத்தார் அதன் பின்பே சீடரானார்.

சிலுவைப் பேரணி சென்ற இடமெல்லாம் வேடிக்கை பார்த்தோர் ''சிலுவை''யின் மகத்தான ஈர்ப்பினால் கவரப்பட்டு பார்வையாளர் நிலையில் இருந்து பங்காளராக மாறி பேரணியில் கலந்துகொண்டனர்.

இந்தச் சிலுவைப் பேரணி பலரை யாழ்ப்பாணத்துக்குச் செல்லவிடாது வழிமறித்தது. எந்தத்திக்கிலும் மானிடர் தலைகள் வீதியை நிரப்பிக் கொண்டன. சிறுவர் முதல் வயோதிபர்வரை படுகொலை செய்யப்பட்ட அடிகளாரின் நிழல் உருவின் முன்னே சிலுவை ஏந்திச்சென்றனர். எங்குமே கடைகள் பூட்டிக் கிடந்தன. சிலுவை சுமந்த யேசுவிற்காக பெத்தலேம் நகரில் மக்கள் அழுதனர். படுகொலைசெய்யப்பட்ட இந்த அடிகளாருக்காக வடமராட்சி மண்ணில் கண்ணீர்த்துளிகள் சிந்திக்கொண்டிருந்தன.

யாழ்ப்பாண மண் எத்தனையோ ஊர்வலங்களைக் கண்டு பெருமைக்குரியது ஆனால் நீதி கேட்டு நடாத்தப்பட்ட நீண்ட சிலுவை ஊர்வலம் இது ஒன்று தான்! அது உள்ளத்தை நெகிழ வைத்தது

இந்த ஊர்வலம் கரவெட்டி திரு இருதயக்கல்லூரியில் முடிவடைந்தது,

வண. தேவநாயகம் ஊர்வல முடிவில் உரைநிகழ்த்துகையில் ''மன்னார் தொடங்கி நெடுந்தீவு வரை நடந்த மும்முனைப் படுகொலை போன்ற எமது சகோதரனிற்கு நீதி கேட்கும் இந்த வேளையில் மரணித்துவிட்ட மக்களுக்காக வேதனையையும் அனுதாபத்தையும் தெரிவிக்கின்றேன். அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்றால்எமது ஒற்றுமையே அதற்கு வழி'' எனக் குறிப்பிட்டார்.

பேராசிரியர் கணேசலிங்கம் அவர்கள் தமதுரையில் 'ஆன்மீகம் மக்குப் பக்க பலமாக இருக்கட்டும். கடவுள் எம்மைக் காப்பாற்றட்டும்' என எமது இன்றைய நிலையை எடுத்துரைத்தார்.

மொத்தத்தில் இந்தப் பேரணியை ஒழுங்கு செய்த முக்கியஸ்தர்களான சிவா கிருஷ்ண மூர்த்தி, சதா காந்திதாசன். திரு வின்சன் டீ போல் செபமாலை ஆசிரியர் ஆகியோர் பாராட்டுதலுக்கு உரியவர்கள்.

— திக்கபக்தன்

### புதிய சித்திரதேர்

சாவகச்சேரி, ஞாயிறு

பூநகரி அத்தாய் தாளக்குளத்து சித்தி விநாயகர் ஆலயத்துக்கு மூன்றரை லட்ச ரூபாய் செலவில் புதிய சித்திரக்தேர் ஒன்று செய்யப்பட்டு வருகின்றது.

இத்தேர் வேலைகளை ஆலய தர்மகர்த்தா திரு எஸ். நவரத்தினம் ஏற்பாடு செய்துள்ளார்.

### சித்தன்கேணி சிவன்கோவில் பஞ்சரதம்

யாழ்ப்பாணம் திங்கள்

சித்தன்கேணி சிவகாமி அம்பாள் சமேத சிவசிதம்பரேஸ்வரர் ஆலய கொடியேற்றம் கடந்த 4ம் திகதி நடைபெற்றது.

இதனை யொட்டி எதிர்வரும் 11 ம் திகதி சப்பரத் திருவிழாவும்,12 ந்திகதி பஞ்ச ரதோற்சவமும்,13 ம் திகதிதீர்த்தோற்சவமும் நடைபெறும்

### இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், திங்கள்

சுதுமலை ஈஞ்சடி ஞான வைரவர் தேவஸ்தான வருடாந்த உற்சவம் இன்று திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது

17 ம் திகதி தேர்த் திருவிழாவும், 18 ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

(வா)

● விவசாயிகளே உஷார்!

# பம்பாய் வெங்காயத்தை அழிக்கும் புதிய நோய்

வ. கதிரமலை

அராலி காரைநகர் பகுதிகளில் பம்பாய் வெங்காய நாற்றும், பயிரும் ஒருவித பூஞ்சண நோயினால் பாதிக்கப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது ஸ்கெல்ரோரியம் றொல்ப்சை (Sclerotium rolfsii) எனும் பூஞ்சணமே இந்நோய்க்கான காரணி என அடையாளம் காணப்பட்டுள்ளது.

### பூஞ்சணத்தினால் தாக்கப்படும் ஏனைய பயிர்வகைகள்

மிளகாய், கத்தரிப் பயிர்களில் 'காறை அழுகல்' எனும் நோயையும், புகையிலை, கத்தரி, மிளகாய், தக்காளி நாற்றங்கால்களில் நாற்றழுகல் (அடி அழுகல்) நோயையும் ஏற்படுத்துகின்ற இப்பூஞ்சணம் தற்பொழுது முதன் முறையாக இப்பகுதிகளில் பம்பாய் வெங்காயத்தையும் தாக்க ஆரம்பித்துள்ளது. நாற்றுமேடையில் ஆரம்பித்து நாற்று நாட்டியபின் வயல்களிலும் தாக்கவாரம்பித்துள்ளது இதனை உடன் கட்டுப்படுத்தாவிடில் பம்பாய் வெங்காயச் செய்கை முழுவதுமே பாதிப்படைந்துவிடும்.

இது மண்ணில் வாழும் ஒரு பூஞ்சணமாகும். நீண்டகாலம் மணணில் தங்கியிருந்து உவப்பான காலநிலையில் பெருகிப் பரவிப் பயிர்களைத் தாக்கும் தன்மையது அத்துடன் பயிர்வகைகள் இல்லாத காலங்களில் இறந்த சேதனப் பொருட்களில் உயிர்வாழக் கூட்டியது.

மிதமிஞ்சிய ஈரலிப்பும், அதிக உஷ்ணமும் இதற்கு வாய்ப்பானதாகும். நீர் வடிகால்தன்மை குறைவான மண்ணில் இந்நோய் தீவிரமடையும். நாற்றுமேடைகளில் நாற்றுக்கள்மிகவும்நெருக்கமாக இருப்பதுவும் நோய்ப் பரம்பலை மேலும் ஊக்குவிக்கும்.

### நோய்த்தாக்கத்தின் அறிகுறிகள்

பொதுவாக நிலமட்டத்தில் தண்டுகளில் அழுகல் ஏற்பட்டு பயிர்வாடி இறக்கும். ஆனால் பம்பாய் வெங்காயத்தில் வேறு விதமாகக் காணப்படுகிறது. நாற்றுக்களின் வேர்ப்பாகமே முதலில் தாக்கப்படுகிறது. இதன் காரணமாக பயிருணவும், நீரும் பயிருக்குக் கிடைக்காமல் வாடி மடியும். ஆரம்ப அறிகுறியாக தாள்கள் நுனியில் இருந்து மஞ்சள் நிறமடைந்து கருகும். பின் முற்றாகக் காய்ந்து வைக்கோல் போலாகிவிடும். தாக்கப்பட்ட வெங்காயத்தில் அடியில் வெள்ளை பூஞ்சண இழையங்களை அவதானிக்கலாம். முதிரும்பொழுது பூஞ்சணம் நிறம்மாறி கடுகு போன்று தோற்றமளிக்கும் வித்திகளை உருவாக்கும். கூர்ந்து அவதானிக்கும்போது இவற்றைக் காணக்கூடியதாக இருக்கும்.

இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகள் வருமாறு:

* நெருக்கமாக விதைப்பதைத் தவிர்க்கவேண்டும்.

* நீர்ப்பாசனத்தைக்கட்டுப் படுத்தி ஈரலிப்பைக் குறைக்க வேண்டும்.

* தாக்கப்பட்ட நாற்று மேடைகளை பி சி. என். பி. (P C N. B) எனும் பங்கசு நாசினிக் கலவையினால் நனைக்கவேண்டும்.

* நாற்றுக்களை நடுவதற்கு முன் வேர், குமிழ் முதலானவற்றை மேற்படி பங்கசு நாசினிக் கலவையில் நனைத்து நட வேண்டும்,

P. C. N. B. பங்கசு நாசினியானது மோறுாட் (Morut 80% W. P.) எனும் பெயரிலும், ரெறக்லோர் (Terraclor 75 % W, P.) எனும் பெயரிலும் விற்பனை செய்யப்படுகிறது.

### பாவிக்கும் முறை

மோறாட் 80% டபிள்யு பி: 5 கிராம் மருந்தை 10 லீற்றர் நீரில் கலந்து 1 சதுர மீற்றர் மேடைக்கு மண் நனையும்படி பூவாளியால் ஊற்றவும்.

(10 X 3 அடி மேடைக்கு 15 கிராம் (½ அவு) மருந்தை 30 லீற்றர் (6½ கலன்) நீரில் கலந்து பிரயோகிக்க வேண்டும்.)

ரெறக்லோர் 75 % டபிள்யு பி: 1500 கிராம் மருந்தை 100 கலன் நீரில் கலந்து ஒரு ஏக்கர் நிலப் பரப்புக்கு மண் நனையும்படி பிரயோகிக்க வேண்டும்.

“சென். பற்றிக்ஸ் மைதானத்தை

# முழுமைபெறச் செய்யமக்கள் முன்வர வேண்டும்”

யாழ்ப்பாணம், திங்கள்

“இலங்கையில் சிறந்த விளையாட்டு மைதானங்களில் ஒன்ருக சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானம் தற்போது விளங்குகின்றது. சகல வசதிகளையும் கொண்ட இம்மைதானத்தின் சில குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு பொதுமக்கள் முன்வர வேண்டும்.”

இவ்வாறு யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ் மாவட்ட பிரதம விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு. எஸ். மரியதாஸ் கூறினர்.

அவர்தமதுரையில் மேலும் கூறியதாவது;

“இம்மைதானத்தைச் சுற்றி பார்வையாளர் மண்டபம் அமைப்பதற்கும், இம்மைதானத்துக்கு அருகாமையில் உள்ள குளத்தை, நீச்சல் தடாகமாக்குவதற்கும், பொதுமக்கள் உதவி செய்ய முன்வந்தால், விளையாட்டமைச்சின் உதவியையும் நிச்சயமாக என்னல் பெறுத்தரமுடியும்” எனத் தெரிவித்தார்.

மேற்படி மெய்வல்லுநர் போட்டியில் “போஞ்சின்” இல்லம் முதலாவது இடத்தையும், ‘மதயூஸ்’ இல்லம் இரண்டாவது இடத்தையும், “டண்” இல்லம் மூன்ருவது இடத்தையும், “லோங்” இல்லம் 4-வது இடத்தையும் பெற்றன.

சாம்பியன் வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் விபரம் வருமாறு:

13- வயது: மைக்மொறேஸன், 14 வயது: ஜே. ஏடயன், 15 வயது: எம்.மில்ரேய், 16 வயது: பி. ரவிக்குமார். 17 வயது: எஸ் லெனின் பெர்ஞண்டோ, 19 வயது: ஆர் கருணுகரன்.

வெற்றி வீரர்களுக்கு திருமதி மரியதாஸ் பரிசில்களை வழங்கினர். (வி)

## அலங்கார உற்சவம்

அராலி, ஞாயிறு

அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனர் கோவில் அலங்கார உற்சவம் இனறு 7ந் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 9 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

## தீவுப் பகுதி தபாற் சேவை

யாழ்ப்பாணம் திங்கள்

தீவுப்பகுதிக்கான தபாற் சேவை வாரத்தில் செவ்வாய், வியாழன் ஆகிய இரு தினங்களில்மட்டுமே நடைபெற்றுவருகிறது.

புங்குடுதீவு தபாலதிபரின் முயற்சியினல் அராலித் துறைமுகம் வழியாக வாரத்தில் இவ்விரு நாட்களுந் சேவை நடைபெற யாழ். பிரதேச தபால் அத்தியட்சகர் அனுமதி வழங்கியுள்ளார். (சிவ)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவு

29-06-86 அன்று யாழ். ஐந்து சந்தியில் குலுக்கவிருந்த சீட்டிழுப்பின் அதிர்ஷ்டசாலி இல. 1940. ஆதரவு தந்தவர்களுக்கு நன்றி.

இங்ஙனம்
சீட்டிழுப்பு குழுவினர்
[C-3341]

## நன்றி நவிலல்

மறைந்த எம் அன்புச் சகோதரி பேணடேற் குலாஸ் அவர்களின் மரணச் சடங்கில் பங்குபற்றி எமக்கு வேண்டிய சகல உதவிகளையும் தாராள மனத்துடன் செய்து, செபத்தாலும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எமது துயரில் பங்கு கொண்டு எமக்கு உறுதுணையாக இருந்த அருட் தந்தையர், அருட்செல்விகள், அருட் சகோதரர், மற்றும் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திருச்சிலுவைக் கன்னியர்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
[C-3340]


**லிடோ**

இன்று முதல்
காலை 10-30, 2-30, 6-30
பாக்கியராஜ்-சரிதா
நடித்த
**மௌனகீதங்கள்**
(கலர் - புதிய பிரதி)

**வெலிங்டன்**

10-30, 2-30. 4-30, 6-30 P-M
முதல் முறையாக யாழ் நகரில் காண்பிக்கப்படுகிறது.
**VENOM**
Action - Thrill

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி சிந்துஜா

இந்துக் கல்லூரி முன் மானிப்பாயைச் சேர்ந்த வைத்தீஸ்வரன் யோகா தம்பதிகளின் செல்வப் புதல்வி “சிந்துஜா” தனது முதலாவதுபிறந்த நாளை இன்று (7-7-86) தனது இல்லத்தில் சிறப்பாகக்கொண்டாடுகிருர். இவரை, அப்பா, அம்மா, விஜிகா அக்கா, முந்தன் அண்ணு, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, சுந்தர் சித்தப்பா, சித்தி, சுதனண்ணு, அனுவண்ணு தம்பி தசிந்தன், கனடா கிருபாசித்தப்பா, மாமி, பெரியம்மா, சித்ராக்க, சுபிரக்கா, சுசியக்கா, யசோக்கா, சிவாண்ணு, சோதிமாமா, சாந்திமாமி, பிரியா, பிரபா, ராஜி மச்சாள் ஆகியோர் பல்லாண்டு காலம் வாழ்கவெனவாழ்த்துகிருர்கள்.

[C3337]

## வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம் திங்கள்,

அச்சுவேலி நாவலப்பதி காட்டுமலைக் கந்தசாமி கோவிலில் திருமஞ்ச வெள்ளோட்ட விழா இன்று நடைபெறவுள்ளது. (வா)

## சிவில்.--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பதியினல் வழங்கப்பட்டுள்ளது இவை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது. [ய செ]

## ‘ரூபவாஹினி’யில் மீண்டும் தமிழ் ஊழியர்கள்

கொழும்பு திங்கள்

ரூபவாஹினி தொலைக்காட்சி சேவை நிறுவனத்திலிருந்து சில வாரங்களுக்கு முன்னர் கட்டாய லீவல் அனுப்பப்பட்ட தமிழ் ஊழியர்கள் மீண்டும் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்திலிருந்து கட்டாய லீவில் அனுப்பப்பட்ட தமிழ் ஊழியர்களைசேவையில் மீண்டும் சேர்த்துக்கொள்வதென அரசு தீர்மானித்தமை ஏற்கனவே அறிந்ததே. [ஷ]

## 3வது டெஸ்ட்: கடும் போட்டி ‘ட்ரா’வில் முடியும்

[லண்டன்]

இந்தியாவும் இங்கிலாந்தும் 3-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இரு கோஷ்டிகளும் முதலாவது இன்னிங்ஸில் சமமான ஓட்டங்களைப் பெற்றுள்ளன.

இங்கிலாந்து முதலாவது இன்னிங்ஸில் மொத்தம் 390 ஓட்டங்களைப் பெற்றது. காப்டன் மைக்கல் கெட்டிங் சிறப்பாக துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல் 183 ஓட்டங்களைப் பெற்றுர்.

இந்தியாவும் முதல் இன்னிங்ஸில் மொத்தம் 390 ஓட்டங்களைப் பெற்றது. வீரர் அமர்நாத் 79 ஓட்டங்களைப் பெற்றுர்.

ஆட்டம்மீண்டும் இன்று திங்கட்கிழமைஆரம்பமாகும். [வி]

## யாழ்.மாவட்ட

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கூறப்படுகிறது.

சுன்னுகத்தில் வசிக்கும் விதவையான திருமதி சரோஜினி சுந்தரமூர்த்தி [28 வயது] என்பவரின் வீட்டில் அவரின்பாவனையிலிருந்த 18 ஆயிரம்ரூபபெறுமதியான மோட்டார் சைக்கிள் கடந்த மாதம்துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவரின் கணவர் 84 டிசம்பரில் ஒன்றரை லட்சம் ரூபாவுடன் வியாபாரநோக்கமாக லொறியில் நுவரெலியா செல்லும்பொழுது பணம்கொள்ளை அடிக்கப்பட்டதுடன் லொறியுடன் சேர்த்து எரித்துக் கொல்லப்பட்டார்.

இப்பொழுது தமது 3 குழந்தைகளுடன் மரக்கறி வயாபாரம் செய்து குடித்தனம் நடத்திவரும் இப்பெண் ஒரு இந்தியவம்சாவளியாவார்.

கடந்த 3ம் திகதி மருதடி விநாயகர் ஆலயத்தின் குருவான சோமஸ்கந்தக்குருக்களின் சுன்னுகத்திலுள்ள வீட்டில் வைத்து இயக்கத்தின் பெயரைச் சொல்லி அவரின் மோட்டார் சைக்கிள் கடத்தப்பட்டுள்ளது.

இவை தவிர வேறும் பல இடங்களிலும் வாகனக்கடத்தல் சம்பவங்கள் தலைதூக்கியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## “சட்டவிரோத மின் இணைப்பு: பொதுமக்கள் விரும்பவில்லை”

யாழ்ப்பாணம், திங்கள்

“சட்டவிரோதமின்பாவனை பல வகையிலும் எமது சமுதாயத்தைப் பாதித்து வருகிறது. ஒழுங்கானதும், சட்டதிட்டங்களை உள்ளடக்கியதுமான முறையில் எமது பகுதி மக்கள் மின்சார பாவனையை மேற்கொள்ளும் அவசியத்தை உணர்த்தும் வகையில் கண்காணிப்புக் குழுக்கள் அமைத்துச செயல்ப்பட வேண்டியநிலையில் பொது நலன்விரும்பும் சகல சக்திகளும் உள்ளன”

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் உதவிச் செயலாளரும் சுன்னுகம் உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருமான திரு. பொ. பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

சட்ட விரோத மின் பாவனையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்ளும் முகமாக சுன்னுகத்தில் நடைபெற்ற கருத்தரங்குக்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

திரு, பாலசிங்கம் மேலும் தெரிவிக்கையில் “இவ் உப அலுவலகத்திற்கு மாதாந்தம் ஒரு இலட்சத்திற்கும் ஐம்பதினுயிரத்திற்கும் இடையில் சட்ட விரோத மின் பாவனையினல் நட்டமேற்பட்டு வருகிறது அத்துடன் சட்டரீதியாக மின்னிணைப்பை ஏற்படுத்தியவர்கள் ஒழுங்காக மின்சாரம் கிடைக்காமல் சஷ்டமுறுகின்றனர் ஆயிரக்கணக்கான பிள்ளைகளின் கல்வி முயற்சிகள் தடைப்படுகின்றன” என்றும் கூறினர். இந்நிலை தொடருமானல் சட்டரீதியாக மின்பாவிப் வர்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டிவரும், எனவே சட்டரீதியாக மின்பாவிப்பவர்களே களவாகப் பாவிப்பவர்களைத் தடுப்பதற்கு முன்வர வேண்டும். என்றும் சொன்ஞர்,

## பேக்கர் மீண்டும் விம்பிள்டன் சம்பியன்

லண்டன் ஜூலை 6,

விம்பிள்டன் உலகக்கிண்ண டெனிஸ் போட்டியின் ஆண்கள் இறுதியாட்டத்தில்மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த பொரிஸ்பேக்கர் சம்பியனுகியுள்ளார்.

18 வயதான பேக்கர் இரண்டாவது தடவையாக விம்பிள்டன் பட்டத்தை தமதாக்கிக் கொண்டுள்ளார். இவர் செக்கோஸ்லாவாக்கிய வீரரான இவான் லென்டலை தோற்கடித்து தமது வெற்றியைப் பெற்றுக்கொண்டார்

## இன்று பஸ்நிலையம் இயங்கும்

வவனியா, ஞாயிறு

வவனியாவில் புதிதாக கட்டப்பட்ட பஸ்நிலையம் மேலிடத்து அவசர உத்தாவுக்கிணங்க இன்றுதிங்கட்கிழமை முதல் இயங்கவுள்ளது.

இப் பஸ்நிலையத்தில் கட்டப்பட்டுள்ள 105 கடைகளையும் திறக்கும்படி பணிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. [ரா]

## புதிய---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ப்டிருபதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மன்னர், அநுராதபுரம், பெலிஓயா, பொலன் நறுவ, மாங்குளம், செட்டிகுளம், திருகோணமலை மட்டக்களப்பு, கிளிநொச்சி, வவனியா, முல்லைத்தீவு, அம்பாறை, புத்தளம் ஆகிய இடங்களைச் சேர்ந்த இராணுவ இணைப்பதிகாரிகள் இந்த விசேட மகாநாட்டில் கலந்து கொண்டனர். [ய-செ]

## இலங்கை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யின் பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதையும்; ஜனுப் ஹமீத்திடம் சுட்டிக்காட்டியதுடன் இலங்கை இனப்பிரச்சனைக்குவிரைவான தீர்வொன்றைஇலங்கை அரசு காணும் பட்சத்திலேயே பொருளாதார, சமூகரீதியாக இலங்கை துரித அபிவிருத்தியடையமுடியும் என்று அவர் குறிப்பிட்டார். [வா]

## இடம்பெயர்ந்த மாணவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

திருகோணமலை மட்டக்களப்புபகுதிகளிலிருந் துயாழ்ப்பாணத்துக்கு இடம் பெயர்ந்துள்ள க. பொ. த உயர்தாப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள், எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள மேற்படி பரீட்சையில் யாழ்ப்பாணத்தில் தோற்றுவதற்கு அனுமதி அளிக்கும்படி யாழ். கல்விப்பணிப்பாளரை கோரியுள்ளனர்.

இம் மாணவர்கள் நல்லூர் இந்து விடுதியில் கூடி இத்தீர்மானத்தை எடுத்துள்ளனர். (ஐ)

## பரிசளிப்பு விழா

சாவகச்சேரி, ஞாயிறு

அறவழியாளர் கழகங்களுக்கான பரிசளிப்பு விழா வைபவம் ஜூலை மாதம் 19 ம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி அரங்கில் இடம் பெறும்.

## நவீல்ட் பாடசாலை விளையாட்டுப் போட்டி

சாவகச்சேரி, ஞாயிறு

கைதடி நவீல்ட் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி இம் மாதம் 19ம் திகதி கைதடியில் நடைபெறவுள்ளது.

## கிழக்கில்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டம் பலத்தசேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவதினம் நள்ளிரவு 12-15 முதல் மூன்று மணித்தியாலங்கள் வரை இராணுவத்திைருக்கும் போராளிளுக்கு மிடைய இக் கடும்சமர் இடம் பெற்றது.

மட்டக்களப்பு – திருமலை கடற்கரையோரமாக இந்த மாங்கேணி இராணுவமுகாம் அமைந்துள்ளது.

**பாலம் தகர்ப்பு**

இத்தாக்குதலுக்கு முன்னர் மட்டக்களப்பு-திருமலை வீதியிலுள்ள காயங்கேணி பாலம் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது மட்டக்களப்பிலிருந்து 24 மைல் தூரத்தில் இப்பாலம் உள்ளது. இப்பாலத்திலிருந்து 6 மைல் தொலைவிலேயே மாங்கேணி இராணுவமுகாம் உள்ளது. இப்பாலம் தகர்க்கப்பட்டதால் திருமலைக்கும் மட்டக்களப்புக்கு மிடையேயான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது

ஹெலிகொப்டர்மூலமேகாயமடைந்தவர்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல முடிந்ததாகத்தெரியவந்துள்ளது. (மா)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்.

காலஞ்சென்ற யாழ்ப்பாணம் ரெம்பிள் வீதி ஒழுங்கை, 42/1ம் இலக்கத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை இமானுவேல்பிள்ளையின் மரணசாதனமின்றி இறந்த மரணச்சொத்துகள் சம்பந்தமாக

காலஞ்சென்றவர்.

அந்தோனிப்பிள்ளை இம்மனுவேலபிள்ளைகைம்பெண் பெண் திரேசம்மா. இல 42/1, ரெம்பிள்வீதி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

மனுதார்.

வழ.இல; தத்துவம் 3970

மேலே இலக்கம்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டுஆடிமாதம் 11ந்திகதியன்று முற்பகல் 9 00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றார்.

1986ம் ஆண்டு வைகாசி மாதம் 26ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,

கு. குலசிங்கம்
பதிவாளர்.

வரைந்தது:
கே.செல்வநாயகம்
மனுதாரின் பதிவுபெற்ற சட்டத்தரணி. C 3311

## பொன்விழாக் காணும் சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை

திரைகடலோடித் திரவியம் தேடிய நம்மூதாதையர் முற்காலத்திலுள்ளோரும் பயன்பெற வாழ்ந்தனர். அமரத்தும் அடைந்தோர் நினைவாய் நிழல் மரங்கள், கிணறு ஆவுரோஞ்சுகல், மடங்கள், கோயில்கள், பாடசாலைகள், ஊருணிகள் போன்றவற்றை நிறுவினர். அவர்கள் இட்ட சிறு விதைகளாகிய திண்ணைப்பள்ளி, சைவப்பள்ளி என்பனவே இன்று பெரும் பாடசாலைகளாய் மிளிர்கின்றன. யாழ்ப்பாணத்தவர்கள் பெரும்பாலோர் மலாய் நாட்டிற்குச் சென்று பெரும் பொருளீட்டினர். அத்தகைய ஒரு குடும்பமே சங்கரத்தையைச்சேர்ந்த சித்தியவான் கணபதிப்பிள்ளை குடும்பம்.

சைவ மக்களின் கல்வியை மேம்பாடடையச் செய்யும் நோக்குடன் நாவலர் கருத்துக்கமைய கிராமங்கள் தோறும் பாடசாலைகளை சைவ வித்தியாவிருத்திச்சங்கத்தினர் நிறுவிவந்த காலத்தில் 1936ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையே சின்னம்மா வித்தியாசாலையாகும். இப்பாடசாலைக்குரியகட்டிடத்தை அமெரிக்க மிஷனரிமாரிடமிருந்து விலைக்கு வாங்கி மேற்படி பாடசாலைக்கு அன்பளித்தவர் சித்தியவான் கணபதிப்பிள்ளையாகும். சித்தியவான் அவர்கள்ஆரம்பித்தபாடசாலை கடந்த 50 ஆண்டுகள் இக்கிராமத்திற்கு அளப்பருஞ் சேவை செய்துள்ளது.

கல்விக்கு அத்திவாரமாகிய ஆரம்பக் கல்வி இங்கு நன்கு ஊட்டப்பட்டுவருகின்றது. இப்பாடசாலையில் குருபூசைகள், பெரியார் தினங்கள், அறிவியல் போட்டிகள், விளையாட்டுப்போட்டிகள், என்பன காலந்தோறும் கிராமத்தவர்களின் ஒத்துழைப்போடு சிறப்புற நடக்கின்றன. இப்பாடசாலை பொன் விழாக்காணும் நல்ல சந்தர்ப்பத்தல் ஸ்தாபகரின் மகனாகிய டாக்டர் செல்வத்துரையின் மகள் திருமதி சாரதாமணி மாணிக்கவாசகரிடம் நிர்வாகப்பொறுப்பு கிடைத்தமை இறைவன் செயலெனலாம். ஸ்தாபகரின் குடும்பத்தினர் அண்மையில் இப்பாடசாலைக்கு நீர்த்தொட்டியமைத்து குடிநீர் வழங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க தொன்றாகும். பாடசாலைப் பொன் விழாவை அதிபரும், ஊரவர்களும் சேர்ந்து வெகு விரைவில் திறம்படக் கொண்டாடவுள்ளன இவ்வேளையில் பாடசாலை மென்மேலும் வளர்ச்சியுற கலைமகள் கடாட்சம் கிடைப்பதாக.

சி. சபாநாதன்.

## விழிப் புலனற்றோர் சங்கம் நடத்திய சீட்டிழுப்பு

யாழ்ப்பாணம், திங்.

யாழ் ரோட்டரிக்கழகத்தினரின் ஆதரவுடன் யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தினரால் விநியோகிக்கப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு விபரம்:-

1ம் பரிசு: பி. பரமேஸ்வரன் இணுவில் தெற்கு, இணுவில். 5241, 2வது பரிசு: ச. கவிதா, சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி. 7680, 3வது பரிசு ஏ ஒனுப், 795, கடற்கரை வீதி, பாசையூர். 5195

ஆறுதற் பரிசுகள்: 3973, 4135, 1526, 15204, 2ʼ176, 4913, 13798, 48ʼ7, 12828, 14679, 4280, 70408, 12123, 24ʼ4, 13834, 243ʼ, 6080, 16384, 14254, 27870, 10303, 3772, 17021, 15805, 14178, 5640, 16870 1556, 119ʼ6, 11889, 4179, 2272, 13167, 1318, 11115, 4399, 00787, 7498, 12777, 00604, 27526 11997.

6ʼ22, 5677, 17093, 00030, 3330, 14ʼ80, 12044, 7146, 0043ʼ, 10638, 6221, 00939, 14166 6226, 12228, 1326ʼ, 2813, 6 77, 5773, ʼ3948, 15 47, ʼ6282, 6233, 13867, 10066, 10783 2395, 7288, 10309, 10864, 951, 1954, 3303 27511, 1459, 15433, 20308, 7664, 2273, 3302, 1413, 142ʼ9, 4ʼ31, 44ʼ4, 44ʼ6, 16868, 17055, 13ʼ56 13604 205ʼ8, 10921 13332, 3437, 7562, 11915, 303ʼ, 5717, 2188.

## இனவிகிதாசார

(3ம் பக்கத் தொடர்ச்சி)

யோசனைகள் பற்றிப் பத்திரிகைகள் மூலம் கிடைக்கும் செய்திகள் அறிந்த வரையில் அவை நிறைவுள்ளதாகத் தெரியவில்லை இதுபற்றிஆராய அரசாங்கம் கால அவகசத்தை நீடிக்க வேண்டும்'' என்று சொன்னார்.

காத்தான்குடி முன்னாள் பட்டின சபைத் தலைவர் ஜனாப் ஏ. அகமதுலெப்வை உட்படப் பல முஸ்லிம் பிரமுகர்கள் கருத்துரை வழங்கினர்.

### தேர்தலில் முஸ்லிம்களுக்கு உரிய இடம்

''இன விகிதாசார அடிப்படையில் மாகாணசபை தேர்தல் நடாத்தப்பட வேண்டும். அப்பொழுதுதான் 9 மாகாண சபைகளிலும் முஸ்லிம்களுக்குரிய பிரதேசம் கிடைக்கும்'' என்று அவர்கள் சொன்னார்கள். (மா)

## பனம் பானம் உற்பத்தி

நமது பிரதேசத்தில் பிரசித்தி பெற்றுவரும் பனம் பானம் உற்பத்தியை தீவுப் பகுதிகளிலும் விஸ்தரிக்கவும், ஊக்குவிக்கவும் பனை அபிவிருத்திச் சபை தீர்மானித்துள்ளது. இவ் உற்பத்தியில் ஈடுபட ஆர்வமுள்ள தனியார் நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பொது தாபனங்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
பனை அபிவித்திச் சபை,
தேசிய வீடமைப்பு செயலகம்,
கண் வீதி,
யாழ்ப்பாணம்.

(A 903)

## 41-ஆம் நாள் நினைவஞ்சலி



நவரத்தினம் ராஜரத்தினம் (சுஜி)

அன்னை மடியில்: 16-11-1961

மண்ணின் மடியில்: 28-05-1986 (மூதூர்)

தாயகமே தாகமாய்ப்
பெற்ற தாயவளை மறந்து
தன்னவரைத் துறந்து
சென்று
தாய்மண்ணின்
விடுதலைக்சாய்த்
தன்னுயிரைத் தந்தவனே
வீரத தமிழனே,
வேங்கையே
எம் ராசனே
ஐயனே
எம் உள்ளமெல்லாம்
உருகுதையா
உம் பிரிவால் வேகுதையா
உருகித் தவிக்கின்றோம்
உம்மையே நினைந்து
நைந்து
உம் உயர்வான லட்சியம்
நிறைவேறப் போவதை
நீர்
காணுமல் ஏன் மறைந்தீர்
கலங்கி நாம்
தவிக்கின்றோம்
உருகி வரும் உள்ளமதை,
பிழிந்து
வரும் துயரமதை
கண்ணீர் மலர்களாக்கி
நின் காலடியில் சமர்ப்பித்தோம்.
உம் ஆத்மா சாந்தி
யடையப் பிரார்த்திக்கும்
உம் பிரிவால் வாடும்:

தாய், சகோதர, சகோதரியர், மாமன்மார், சிறியதாய், மாமிமார், மைத்துனர்கள், மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

அரியாலை. (C 3295)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## யாழ். அபிவிருத்திச்சபை அறிவித்தல்

1986ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28ம் திகதி காலை 10-00 மணிவரை யாழ் அபிவிருத்திச்சபை பிரதிச் செயலாளர் (நீர். கட். வேலை) அவர்களால் கீழே காட்டப்பட்ட வேலைகளுக்கு, பெருந்தெருக்கள் திணைக்களம். கட்டிடத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் அரசாங்கத் திணைக்களம்/கூட்டுத்தாபனங்களில் கீழ்க்காட்டப்பட்ட வேலைகளின் எதிரே காட்டப்பட்ட தொகைக்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல்வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் காலை 10 10 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அததருணம் ஒப்பந்தகாரரோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

கேள்விக்காரர் வைப்புப்பணத்தையும் கிரயப்பணத்தையும் சம்பந்தப்பட்ட யாழ் அபிவிருத்திச் சபை உப அலுவலகத்தில் செலுத்துவதன் பெயரில் 1986ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ஆம் திகதி நண்பகல் 12 00 மணிவரை சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

| யாழ். அபிவிருத்திச் சபை உப அலுவலகம் | | வேலையின் பெயர் | ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்ட தொகை(தகைமை) | வைப்புப் பணம் | கிரயப் பணம் |
|---|---|---|---|---|---|
| 01. | ஏழாலை | நூல்நிலையக் கட்டிடம் | 75,000/- | 60/- | 25/- |
| 02. | மானிப்பாய் (கிராமம்) | அலுவலகத்திலிருந்து கட்டிட விஸ்தரிப்பு மின்சார பகுதிக்கு | 40,000/- | 50/- | 25/- |
| 03. | உரும்பிராய் | காரியாலயக் கட்டிடம் | 100 000/- | 100/- | 50/- |
| 04. | புத்தூர் | நூல்நிலையக் கட்டிடம் | 40.000/- | 50/- | 25/- |
| 05. | நீர்வேலி | நூல்நிலையக் கட்டிடம் | 100.00 /- | 100/- | 50/- |
| 06. | குடத்தனை | நாகர்கோவில் வீதி தாங்குசுவர் விஸ்தரிப்பு | 35 000/- | 50/- | 25/- |
| 07. | குடத்தனை | நூல்நிலையம் அமைத்தல் | 70.000/- | 60/- | 25/- |
| 08. | மிருசுவில் | நூல்நிலையக் கட்டிடம் | 75,000/- | 60/- | 25/- |
| 09. | கச்சாய் | கொடிகாமம் சந்தைக்கு நீர் விநியோகம் | 60,000/- | 50/- | 25/- |
| 10. | கொக்குவில் | நூல் நிலையக் கட்டிடம் 2ம் பகுதி | 100,000/- | 100/- | 50/- |
| 11. | கொக்குவில் | ஆடியபாதம் சந்தைக் கட்டிடம் | 50,000/- | 50/- | 25/- |
| 12. | கொக்குவில் | சுடலைமடம் அமைத்தல் | 35,000/- | 50/- | 25/- |
| 13. | நெடுந்தீவு | நூல்நிலையக் கட்டிடம் | 40,000/- | 50/- | 25/- |
| 14. | வேலணை | எல்லைச்சுவர் நீர்விநியோகப் பகுதி | 100,000/- | 100/- | 50/- |
| 15. | புலோப்பளை | 5 கிணறு அமைத்தல் மசார் வீடமைப்புத்திட்டம் | 40 000/- | 50/- | 25/- |
| 16. | புலோப்பளை | கடைகள் கட்டல் | 40,000/- | 50/- | 25/- |

அன்ரன் அல்பிரட்
பிரதிச் செயலாளர் (நீர். க. வே.)

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
01.07.1986.

[A 905]

## செனித்தின் முக்கிய அறிவித்தல்

**தயவுசெய்து வாடிக்கையாளர்கள், வியாபாரிகள் கவனிக்க!**

1. எம்மால் விநியோகிக்கப்படும் நெல்லிரசம் மற்றும் பொருட்கள் தரஆய்விற்கு பின்பே உங்கள் கைக்கு வந்தடைகின்றன.
2. எக்காரணங்கொண்டும் தரம் மாற்றப்படாதென்கின்ற உத்தரவாதத்தில் பாவனையாளர்களுக்கு விற்கப்படுகின்றது.
3. வினியோகிக்கப்பட்ட பொருட்களுக்கு குறைந்தது 180 நாட்கள் முழு உத்தரவாதம் கொடுக்கப்படுகின்றது.

**பாவனையாளருக்கு:**

4. தயவுசெய்து தேவையற்ற குறைகளை எமது விற்பனை பிரதிநிதிகளுக்கு சுமத்தவேண்டாம். உங்கள் மனநிறைவே எங்கள் செல்வம். உங்களுக்கு மனநிறைவென்றால் மற்றவர்களுக்கும் சொல்லுங்கள் — அல்லது எங்களுக்குச் சொல்லுங்கள்.

ஆதரவிற்கு நன்றி!

ஜோ. எகட்டன்
(செனித்)
யாழ். நகர்.

(A 770)

## மன்னிப்புக் கோர மறுத்தவர் சவூதியிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டார்

(எம். சுப்பந்திரன்)

கம்பனி அதிகாரியிடம் மன்னிப்புக் கோர மறுத்த இளைஞர் ஒருவர் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

சவூதி அரேபியாவின் தலைநகரான றியாட்டில் உள்ள கம்பனி ஒன்றில் பணியாற்றி வந்த வடமராட்சியைச் சேர்ந்த ஒருவரே வேலை பறிக்கப்பட்டதுடன் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டவராவார்.

றியாட் நகரப்பகுதியில் முரசலாத் என்னும் இடத்தில் இருக்கும் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் பணியாற்றி வந்த பிரஸ்தாப இளைஞர் அவர்க கண்காணிப்பில ஈடுபட்டிருந்த கம்பனி அதிகாரியின் கட்டளைக்கு செவிசாய்க்காது அந்த அதிகாரியை அவமதிக்கும்முறையில் நடந்து கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சமபவத்தையடுத்து பிரஸ்தாப மேலதிகாரியிடம் மன்னிப்புக்கோருமபடி இளைஞரை கம்பனி கேட்டுக்கொண்டதாகவும் அதனை ஏற்றுக்கொள்வதற்கு அவ்விளைஞர் மறுப்புதெரிவிததததைத் தொடர்ந்து இவரை இலங்கைக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை மேறகொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இங்கே நான்கு வருடங்களாக பணியாற்றிய இந்த இளைஞரது வேலை பறிபோனது இக்கம்பனியில் பணிபுரியும் வடபகுதி இளைஞர்கள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

## "விளையாட்டுப் போட்டிகள் மூளை விருத்திக்கு உதவும்"

### — கல்விப்பணிப்பாளர்

யாழ்ப்பாணம், திங்.

"மூளை விருததியடைய மாணவர்கள் விளையாட்டில் அக்கறை காண்பிககவேண்டும்" என்று கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற யாழ். நல்லூர் சாதனா பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திருமதி பத்மா சோமகாந்தன் தலைமையில் இந்த விளையாட்டுப போட்டி இடம்பெறறது.

கல்விப் பணிப்பாளர் தொடர்ந்து பேசியதாவது:-

"மாணவர்கள் கல்வியில்முன்னேறுவதற்கும், மூளை விருத்திபெறுவதற்கும் தசைநார்கள உரமபெறுவதற்கும் விளையாட்டில் அக்கறை காட்டவேண்டும். பல்வேறுவிதமான அப்பியாசங்களை உள்ளடக்கிய விளையாட்டில் பயிறசிபெறுவதன் மூலமே மாணவர்களின உள்ளமும் உற்சாகமடைந்து கல்வி கற்க ஏதுவாக அமையும். விளையாட்டுப் போட்டிகள் சோர்வுள்ள மாணவர்களையும் சுறுசுறுப்பாக்கும்" என்றார்.

இவ்விளையாட்டுப் போட்டியில் வள்ளுவர் இல்லம் முதலாம் இடத்தையும், பாரதி இல்லம் இரண்டாம் இடத்தையும், காந்தி இல்லம் மூன்றும் இடத்தையும், கம்பன் இல்லம் நான்காம் இடத்தையும் பெற்றன.


# நெஸ்டோமோல்ட்

## பருகத் தகுந்த தருணம்·இதுவே!






நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் அன்றுட வேலைகளினுல் ஏற்படும் உடற்களைப்பும் மனக்களைப்பும் நீங்கி புத்துணர்வுடனும் உற்சாகத்துடனும் விளங்க நவ நெஸ்டோமோல்ட் இப்பொழுது 12 அத்தியாவசிய விட்டமின்களால் வளமூட்டப்பட்டுள்ளது.

நெஸடோமோல்ட் ஊட்டச்சத்துமிக்க பூரண ஆரோக்கிய பானம். பாலும் மோல்டட் பார்லியும் கொண்டு தயாரிக்கப்பட்டு அத்தியாவசிய விட்டமின்களால் செறிவாக்கப்பட்டுள்ளது.

தினமும் நெஸ்டோமோல்ட் பருகுங்கள். அது புத்துணர்வூட்டும் சுவையான சுடுபானம். குளிரூட்டியும் பருகலாம். உங்களுக்கு மேலதிக விட்டமின்கள் கொண்ட நெஸ்டோமோல்ட் தேவைப்படும் தருணம் இதுவே.




**NESTOMALT®**
**MALTED MILK**

விலை – 450 கி. ரூ. 44/- 250 கி. ரூ. 26/-

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

திங்கட்கிழமை 7-7-86

# "பாதுகாக்க வந்தவர்களால் பாதுகாப்பற்ற நிலை"

## பிதா ஜீவா போல்

அச்சுவேலி ஞாயிறு

"பாதுகாப்புக்கு வந்தவர்கள் பாதுகாப்பு வலயங்களை விஸ்தரிப்பதால் மக்களுக்கு பாதுகாப்பற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. வளம் கொழிக்கும் எமது மண் வளமற்ற பாலைவனமாக மாறும் நிலை உருவாகியுள்ளது. சிவந்த எமது மண் எம்மவரின் செங்குருதி சிந்தப்படுவதால் மேலும் சிவப்பாகியுள்ளது"

இவ்வாறு நேற்று அச்சுவேலியில் நடைபெற்ற மாபெரும் சிலுவை ஊர்வலத்தின் இறுதியில் நடைபெற்ற வேதாகம வழிபாட்டின் போது வணக்கத்துக்குரிய பிதா ஜீவா போல் அடிகளார் குறிப்பிட்டார்.

கடந்த 20-6-86 இல் தோலகட்டி செபமாலைத் தாசர் ஆச்சிரமத்தில் வைத்து இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட சங்கைக்குரிய சகோதரர் மனுவேல் வென்செஸ்லாஸ் அவர்களின் கொலையைக் கண்டித்து ஐயாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்ட ஆறு மைல்தூர ஊர்வலத்தில் சுலோகங்கள் சிலுவைகள் ஆகியன எடுத்துச் செல்லப் பட்டன.

ஊர்வலத்தின் முடிவில் அச்சுவேலி புனித சூசையப்பர் தேவாலயத்தில் வழிபாடும் அதனைத் தொடர்ந்து தோலகட்டி, வயாவிளான், அச்சுவேலி பங்குக்குரு வண. பிதா. பேர்னட் றெக்னோ அவர்களின் தலைமையில் கண்டனக் கூட்டமும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து பேசிய யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடாதிபதி திரு எஸ்.சிவஞானசுந்தரம் [நந்தி] குறிப்பிட்டதாவது 1968-ம் ஆண்டு பாணந்துறையில் இந்துக்குருக்கள் கொலைசெய்யப்பட்டதில் இருந்து ஆரம்பமாகிய படுகொலைகள் தோலகட்டியில் சங்கைக்குரிய சகோதரர் வென்செஸ்லாஸ் அவர்களின் கொலையுடன் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

"இலங்கையில் நடப்பது சமய பிரச்சனையோ, வர்க்கப் பிரச்சனையோ, மொழிப் பிரச்சனையோ அல்ல. இது ஒரு முற்றுமுழுதான இனப் பிரச்சனையேயாகும் தராதரம் பாராது வயது வேறுபாடின்றி நல்லவன் கெட்டவன் என்ற வேறுபாடின்றி சாதாரண பிரசை போராளி என்ற வேறுபாடின்றி தமிழர்கள் கொல்லப்படும் சம்பவங்கள் இதனை நன்கு எடுத்துக்காட்டுகின்றன".

இந்தக் கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப் பீடாதிபதி திரு. பாலகிருஷ்ணன் தென்னிந்தியத் திருச்சபையின் அச்சுவேலிப்பகுதி குருவானவர் வண ஜெயசிங்கம் அடிகளார் ஆகியோர் உரையாற்றினர்கள்.

## மல்லாகத்தில் அகதிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

மல்லாகம் பிரஜைகள் குழுவால் நிர்வகிக்கப்படும் மல்லாகம் புதுமை மாதா ஆலய அகதிகள் முகாமுக்கு முகாமையாளராக திரு தி. அன்ரனி தெரிவுசெய்யப் பட்டுள்ளார்.

இம் முகாமிற்கு உதவி செய்ய விரும்புவோர் அவருடன் தொடர்புகொள்ளும்படி பிரஜைகள் குழு செயலர் கேட்டுள்ளார், [மா]

பயங்கரவாத

## தடைச்சட்டத்தை நீக்க ஜனாதிபதி விருப்பம்?

கொழும்பு, ஞாயிறு

இலங்கை அரசின் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு ஜனாதிபதியைச் சந்தித்த பல்வேறு அரசியல்கட்சிகள் விடுத்த வேண்டுகோளுக்கு ஜனாதிபதி சாதகமாகப் பதிலளித்திருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், கம்யூனிஸ்ட்கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, ஜனநாயக தொழிலாளர்காங்கிரஸ் ஆகியவையே இனப் பிரச்னை தீர்வு சம்பந்தமான சமரஸ பேச்சுக்கள் சுமுகமானமுறையில்நடைபெற இச்சட்டத்தை நீக்கவேண்டுமென ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தன.

தமது கோரிக்கைக்கு ஜனாதிபதியின் பதில் திருப்திகரமாக அமைந்திருந்ததாக இக்கட்சிகளின் பிரதிநிதிகள் பின்னர் கூறியதாக சென்னை 'இந்து' தெரிவித்துள்ளது. [ய-செ]

## தேசிய சுகாதார வாரம்

புலோலி, திங்கள்

அகில இலங்கை தேசிய சுகாதார வாரத்தை வடமராட்சிப் பகுதியில் வெகு சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகளை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. லலித்குமார் மேற்கொண்டுவருகின்றார்.

இன்று 7-ம் திகதி தொடக்கம் 12 ம் திகதி வரை இத்தேசிய சுகாதாரவாரம்கொண்டாடப்படவுள்ளது. இத்தேசிய சுகாதாரவாரத்தையொட்டி பாடசாலை மாணவ, மாணவிகளுக்கிடையேயான பேச்சுப் போட்டிகளும் நடாத்தப்படவுள்ளன. அத்துடன் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையங்களுக்கிடையேயான சிறந்த ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையத்தெரிவும், சிறந்தமுதல் உதவியாளர் தெரிவும் நடைபெறவுள்ளன.

இன்று 7-ம் திகதி நாகர்கோவிலில் நாகர்கோவில் மகாவித்தியாலயத்திலும், 8-ம் திகதி புலோலி அமெரிக்கன் தமிழ்க்கலவன் பாடசாலையிலும். 10-ம் திகதி உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலும். 11-ம் திகதி சரவெட்டி விக்கினேஸ்வர க்கல்லூரியிலும் சுகாதார வார விழாக்கள் நடைபெறவுள்ளன இறுதிநாளான 12 ம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் சுகாதார வார இறுதிநாள் நிகழ்ச்சிகளும் பரிசளிப்பு விழாவும் இடம்பெறும். இதனையடுத்து நடைபெறும்கலாசார நிகழ்ச்சிகளில் சிறந்த நிகழ்ச்சிகளுக்கும் பரிசில்கள் வழங்கப்படும்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் - யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூலை மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49. Telegram Eelanadu, Telephone 22389, 24126

'ஈழ ஆதரவு வாரம்'

## ஒருமித்த புரிந்துணர்வுக்கு உதவியுள்ளது!

### எ. எஸ். எ. செயலர் கருத்து

சென்னை, ஞாயிறு

"சென்னையில் ஜூன் 28 முதல் நடைபெற்ற ஈழ ஆதரவு வாரம்' தமிழ்மக்கள் தங்கள் சுயநிர்ணய உரிமைக்காக நடத்தும் போராட்டத்துக்கு தீவிர ஆதரவைப்பெறவும், அப்போராட்டம் குறித்த ஒருமித்த புரிந்துணர்வை ஏற்படுத்தவும் உதவியுள்ளது."

இவ்வாறு, மாணவ இளைஞர் பொதுமன்றத்தினுலும், ஆசிய மாணவர் ஒன்றியத்தினுலும் இணைந்து நடத்தப்பட்ட ஈழஆதரவு வாரத்தைப் பற்றிக் கருத்துத் தெரிவித்த ஆசியமாணவர் ஒன்றியத்தின் செயலாளர்நாயகம் திரு. மன்னி சி கலொன்ஸோ கூறினார்.

"ஒடுக்கப்பட்ட மக்கள் என்ற வகையில் தமிழரின் நிலையை உலகளாவிய ரீதியில் எடுத்துக்காட்டவும் இம்மாநாடு உதவியுள்ளதாக திரு. கலொன்ஸோ மேலும் கூறினார்.

கடந்த வெள்ளிக்கிழமை முடிவுற்ற இம்மாநாட்டின் போது த. வி கூ, ஈரோஸ். புளொட், ரெலோ, எல்.ரி ரி. ஈ, போன்ற பல்வேறு தமிழ்க் குழுக்கள் தமிழர் போராட்டத்தை எவ்வாறு நோக்குகின்றன. இவர்களைப் பிரிக்கும் ஒன்றிணைக்கும் கொள்கைகள் பற்றி விவாதங்கள் நடைபெற்றதாகவும் தமிழர் குழுக்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவது பற்றியும் விவாதிக்கப்பட்டதாக திரு, கலொன்ஸோ மேலும் கூறினர்.

18 நாடுகளைச் சேர்ந்த சுமார் 80 பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்குபற்றினர். அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, பிலிப்பைன்ஸ் பாலஸ்தீனம் ஹொங்கொங், சிங்கப்பூர், ஈரான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் இவர்களில் அடங்குவார்.

மாநாட்டிற்கு வருகை தந்திருந்த பிரதிகள் நாகப்பட்டிணத்திலுள்ள இருஈழஅகதிகள் முகாம்களுக்கும் விஜயம் செய்தனர். [ய-செ]

## இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், திங்கள்

பனை அபிவிருத்திச் சபையின் திட்டங்கள், செயற்பாடுகள் பற்றிய கலந்துரையாடலும், பத்திரிகையாளர் மகாநாடும் இன்று பிற்பகல் 3-30 மணியளவில் யாழ். கண்டிவீதியிலுள்ள தேசிய வீடமைப்பு செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்களின் நோக்கும் சிந்தனையும் பனை அபிருருத்திச் சபையை நோக்கியிருப்பதால் அதன் செயற்பாடுகள் பற்றி கலந்துரையாடுவதற்கு இந்த மகாநாடு கூட்டப்படுவதாக பனை அபிவிருத்திசபைத் தலைவர் திரு. க. நடராசா தெரிவிக்கிறார். [மா]

## இ. போ. ச. ஊழியர்கள் பாதிப்பில்லை

கொழும்பு, ஞாயிறு

இலங்கை மத்திய போக்குவரத்துச்சபையை புனரமைப்புச் செய்வதனுல் அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கும் சேவை நிலையங்கள் எவற்றிற்கும் பாதிப்பு ஏற்படாதென போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச் முகமத் தெரிவித்தார்.

முதுபெரும் பாரதத் தலைவர்

## 'பாபுஜி' ஜெகஜீவன்ராம் காலமானார்!

புதுடில்லி, ஜுலை-6

பாரதத்தின் மூத்த தேசியத் தலைவர்களில் ஒருவரும், முன்னாள் துணைப் பிரதமரும் காங்கிரஸ் [ஜே] கட்சியின் தலைவருமான திரு ஜெ ஜீவன்ராம் நேற்றுக்காலை புதுடில்லியில் காலமானார்.

சென்றமாதம் 8 ம் திகதி புதுடில்லி ராம்மனோஹர் லோஹியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட திரு ராம் கடந்த சில நாட்களாக மயங்கிய நிலையிலிருந்தார். நேற்றுக்காலை 10-20 மணியளவில் அவரது உயிர் பிரிந்தது.

1908 ஏப்ரல் 5-ல் பீஹார் மாநிலத்தின் போஜ்பூர் மாவட்டத்தில் பிறநது கல்கத்தா பல்கலைக்கழகத்தில் தமது இளமைக் கல்வியைப் பெற்ற திரு. ஜெகஜீவன்ராம் ஏறத்தாள 40 ஆண்டுகள் இந்திய அரசியலில் முக்கிய இடத்தை வகித்தார்.

திரு ராம், இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் தீவிரபங்கு வகித்தவர் 1940ல் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுச் சிறைசென்றவர் 1942 ல் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில்பங்குபற்றி மீண்டும் சிறைசென்ருர்.

1936 ல் பீஹார் சட்டமேலவை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். 1977 வரை காங்கிரஸ் அரசாங்கங்களில் பாதுகாப்பு வேலைவாய்ப்பு, தாழ்த்தப்பட்டோர் நலன்புரித்துறை, விவசாயம் முதலான பல்வேறு முக்கியதுறைகளுக்கான அமைச்சராகப் பணியாற்றினர்.

1977 ல் காங்கிரஸிலிருந்து பிரிந்து ஜனநாயக காங்கிரஸை ஆரம்பித்து, பின்னர் ஜனதா கூட்டணியில் இணைந்து திரு மொராஜிதேசாயின் அமைச்சரவையில் பணியாற்றினர்.

1980 ல் ஜனதா கூட்டணியிலிருந்து விலகி காங்கிரஸ் [ஜே] கட்சியை உருவாக்கி இறுதிவரை அதற்காக உழைத்தார்.

திரு. ராமின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக பாரதமெங்கும் மூன்றுநாள் துக்க அனுட்டானம் பிரகடனஞ் செய்யப்பட்டுள்ளது. [ஷ]

## ஆட்கடத்தல்

வவனியா, ஞாயிறு

வவனியா கோவில் குளத்தில் நபரொருவர் இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்டவர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவரென்றும் அப்பகுதியில் நீண்டகாலம் வசித்து வந்தவர் என்றும் கூறப்படுகின்றது. [ரா]

## நகைக்கடை உரிமையாளரிடம் கொள்ளை

மூதூர், திங்கள்

நகைக்கடை உரிமையாளரின் மனைவி அணிந்திருந்த நகைகள் முகமூடி அணிந்த இருவரினுல்துப்பாக்கிமுனையில் கொள்ளையடிப்பட்டுள்ளன.

திருமலை மாவட்டத்திலுள்ள தக்கிஸா வீதியில் நேற்றுக்காலை இக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

இவ்வீதியிலுள்ள நகைக்கடை உரிமையாளரான திருமதி கிருஷ்ணசாமி அணிந்திருந்த சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளே கொள்ளையடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## அனுமதிபெற்று பஸ்கள் கொழும்பு சென்றன

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுக்காலை தனியாருக்குச் சொந்தமான மூன்று பிரயாணிகள் பஸ்கள் கொழும்புக்குப்புறப்பட்டுச் சென்றன.

பிள்ளையார் விலாஸுக்குச் சொந்தமான பஸ். யாழ். கோட்டை முகாமிலும் 'சேவ்ரி' ஸ்தாபனத்தாரின் 2 பஸ்கள் பலாலி முகாமிலும் பிரயாண அனுமதிப்பத்திரங்கள் பெற்றுச் சென்றதாகத் தெரிவிககப்படுகிறது. [மா]

## மரண அறிவித்தல்

### திரு றெஜீஸ் சண்முகராஜா

கல்வியங்காட்டைச் சேர்ந்த திரு. றெஜீஸ் சண்முகராஜா ஜெர்மனியில் காலமாகிவிட்டார். இவர், ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஆவார். அன்னார் பொன்னுத்துரை தம்பதிகளின் புதல்வனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், குலேந்திரநாதன் [இந்தியா] மகேந்திரநாதன் [கனடா] வசந்தகுமாரி [இந்தியா] ஜீவநாதன் [கனடா] லோகநாதன் [கனடா] சாந்தகுமாரி [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், வதனுவின் [இந்தியா] அன்பு மாமனுரும், சிவக்கொழுந்து, இராசம்மாவின் அன்பு மருமகனுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் புதன்கிழமை (9-7-86) பிற்பகல் 2 மணிக்கு இல: 9, பல்லவன் தெரு, முத்தமிழ் நகர், பம்மல், சென்னை-75 இல் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
இ. சுப்பிரமணியம்.

(C-3336)